**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள் 29 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 310/2022-ல்**

**அசல் வழக்கு எண். 95/2021**

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் சுப்பிரமணியன் மனைவி,இந்து, வீட்டுக்குடித்தனம், 60 வயதுள்ள சாந்தா.
2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் கோவிந்தன் குமாரர், இந்து, சிவமதம், 65 வயதுள்ள சுப்ரமணியன்.
3. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் சுப்பிரமணியன் குமாரர், இந்து, சிவமதம், 32 வயதுள்ள துரைமுருகன்
4. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் சுப்பிரமணியன் குமாரர், இந்து, சிவமதம், 47 வயதுள்ள ராஜ்குமார்.
5. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ராஜ்குமார் குமாரர்,இந்து, சிவமதம், 24 வயதுள்ள குபேந்திரன்.
6. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ராஜ்குமார் குமாரர், இந்து, சிவமதம், 22 வயதுள்ள இளஞ்செழியன்.
7. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் துரைமுருகன் மனைவி, இந்து, வீட்டுக்குடித்தனம், 30 வயதுள்ள வெண்ணிலா.
8. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ராஜ்குமார் மனைவி, இந்து, வீட்டுக்குடித்தனம், 45 வயதுள்ள சாந்தி. .... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// எதிர் //

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் சிவஞானம் குமாரர், இந்து, சிவமதம், 44 வயதுள்ள முருகேசன்

2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, குன்னியூர் கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் சிவஞானம் மனைவி, இந்து, வீட்டுக்குடித்தனம், 65 வயதுள்ள அருமைக்கண்ணு .

.....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது, அசல் வழக்கில் கடந்த 22.02.2022 ம் தேதியன்று தோன்றா தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டதை ரத்து செய்து அசல் வழக்கினை மேல் நடத்த உத்தரவிடக்கோரி உ.ந.ச.கட்டளை 9 விதி 7-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 28.07.2022

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 25.08.2022

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 25.08.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று (09.12.2022) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. G. தினேஷ்** அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. விஜயன், திரு. K.சிவசுந்தர், திரு. M.நிலவழகன் ஆகியோர்கள்** முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று(15.12.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1. இம்மனுவானது கடந்த 22.02.2022 ம் தேதி இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மனுதாரர்களுக்கு எதிரான ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ரூ. 500/-ஐ மனுசெலவுத்தொகையாக

செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

S/d.A.S.Ameerdheen.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)